அ.வ.எண்: 49/2023 நாள்: 22.07.2026

வா.சா.1 – பழனிச்சாமி

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் ஏழாம் வகுப்பு வரை படித்துள்ளேன். இந்திரா, முத்துலட்சுமி, செந்தில்ராமு ஆகியோர் யார் என்றால் அனைவரும் என்னுடன் பிறந்தவர்கள் ஆவர். அவர்கள் என்ன படித்துள்ளார்கள் என்றால், முத்துலட்சுமி என்பவர் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார். ராமநாதன் எனது தகப்பனார் என்பதற்காக எனது கல்வி சான்றிதழையோ அல்லது மேற்படி முத்துலட்சுமி என்பவர் கல்விச்சான்றிதழையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ராமநாதன் எப்பொழுது இறந்தார் என்றால் 2016 ஆம் ஆண்டு இறந்தார், தேதி மாதம் நினைவில் இல்லை. அவரது முதல் மனைவியின் பெயர் என்ன என்றால் சொர்ணம் அம்மாள் ஆகும்.

2. மேற்படி ராமநாதன் அவரது இறப்பு காலம் வரை சிறுவனூரில் என்னுடன் தான் வசித்து வந்தார் என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

மேற்படி ராமநாதனுக்கு எனது தாயாருடன் எந்த வருடம் திருமணம் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. எனது தாயாரின் வாரிசு சான்றிதழை நான் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். அந்த வாரிசு சான்றிதழை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நாங்கள் செய்யவில்லை, தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது தாயாரின் வாரிசு சான்றிதழில் ராமநாதன் என்பவரது பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. ராமநாதனின் முதல் மனைவியான சொர்ணம் அம்மாளுக்கு பிறந்த மகள் ராஜகுமாரி தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் செப்பான்வயல் கிராமத்தில் வசித்து வருகிறார். மேற்படி ராஜகுமாரிக்கு என்ன வயது இருக்கும் என்றால் தெரியாது, அவரது மகனுக்கும் எனக்கும் ஒரே வயது. ராமநாதன் என்பவருக்கு நிறைய சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ராஜகுமாரி உடன் தற்போது நல்ல பேச்சுவார்த்தையில் உள்ளோமா என்றால், எனது தந்தை இறந்த பிறகு பேச்சு வார்த்தை இல்லை. 2016 ஆம் ஆண்டிலிருந்தே எனக்கும் ராஜகுமாரிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். ராமநாதன் உயிருடன் இருந்த காலத்திலேயே தனது சொத்துக்களை ராஜகுமாரிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். எனது சகோதரிக்கும் அதே போல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார்.

4. மேற்படி ராஜகுமாரி தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது மகன் வீரபாலுவிற்கு செட்டில்மென்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, ராமநாதன் என்பவரை அவர் உயிருடன் இருக்கும் பொழுதே மேற்படி வீர பாலுவிற்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். சொத்து சம்பந்தமாக எனக்கும் ராஜகுமாருக்கும் இடையே சட்ட நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் ராஜகுமாரிக்கும் இடையே சொத்துக்கள் தொடர்பான நடவடிக்கை இருந்து வருவதால் இந்த 2 முதல் 5 பிரதிவாதிகள் மேற்படி வாரிசு சான்றிதழில் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. ராமநாதன் என்பவருக்கு இரண்டு மனைவிகள் இருப்பதாலும் வாரிசு சான்றிதழ் சம்பந்தமாக ராஜகுமாரி என்பவர் ஆட்சேபனை செய்துள்ளதாலும் இந்த 2 முதல் 5 பிரதிவாதிகளால் வாரிசு சான்றிதழ் வழங்க இயலாது என்று சொன்னால் சரியல்ல.

5. இந்த நீதிமன்றத்தில் எனது தாயாரான ஜெயா ராமநாதனின் மனைவி என்றும் நாங்கள் ராமநாதனின் வாரிசுகள் என்றும் நிரூபிக்கும் பட்சத்தில் 2 முதல் 5 பிரதிவாதிகள் வாரிசு சான்றிதழ் வழங்க தயாராக உள்ளனர் என்று சொன்னால் சரிதான்.

<u>**மறுவிசாரணை**</u> – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.07.22 16:36:34 +0530